அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்).

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கீழக்கரை பால் விநியோகச் சங்கம்.

*வினா எண். 812—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழக்கரை பால்விநியோகச் சங்கத்தில் ரூ. 12 ஆயிரம் கையாடல் நடைபெற்றுள்ளதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

(இ) கையாடல் பணம் வசூலிக்கப்பட்டதா ?

(ஈ) கையாடல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) சங்கத்தில் 1977–78ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டது. தணிக்கையாளருடையத் தனி அறிக்கையின் பேரில் சங்கத்தின் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த விசாரணையில் சங்கத் தலைவர் மற்றும் சங்கக் கணக்காளர் ஆகியோர் ரூ. 12,900 தற்காலிகக் கையாடல் செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

1981 எப்ரல் 21]

(இ), (ஈ) மற்றும் (உ): ஆம். சங்கத் தலைவர் திரு. எம்.எம்.கே. முகமது இப்ரகீம், கணக்காளர் திரு. அந்தோணி ஜோசப் ஆகியோர் மீது சங்கப்பணத்தைத் தற்காலிகக் கையாடல் செய்த குற்றத்திற்காக மேல் நடவடிக்கை தொடரும் பணி காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கு இன்னும் காவல் துறையின் புலனாய்வில் உள்ளது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, 1977–78ஆம் ஆண்டில் கையாடல் நடந்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரூ. 12,900 தற்காலிகக் கையாடல் செய்துள்ளனர் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்காலிகக் கையாடல் என்றால் எப்படி? அவர்கள் எடுத்த பணத்தை அவர்கள் மறுபடியும் கட்டிவிட்டால், அது தற்காலிகக் கையாடல் என்று கருதப்படுமா? அந்தக் கையாடல் செய்தவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ளதா? அவர்கள் பதவிகள் பறிக்கப்பட்டுவிட்டனவா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகக் கையாடல் என்பதற்கு முதலிலே பணம் எடுத்து விட்டு, ஒரு சில நாட்களில் அதைக் கட்டிவிடுவது என்கிற பொருளில் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த மாதிரி 4 முறை செய்து இருக்கிறார்கள். சங்கக் கணக்காளர் அதற்கு உடந்தையாக இருந்து இருக்கிறார்கள். இந்த வகையில் ரூ. 12,900 கையாடல் செய்யப்பட்டு இருக்கிறது. கணக்காளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தற்காலிகமாக பணியில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார். விசாரணை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதைப்போலவே தலைவர் பொறுப்பில் இருந்தவரையும் அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கி இருக்கிறார்கள். இரண்டு பேர் மீதும் புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அது முடிந்த பிறகு அந்தப் புலனாய்வு மீது கிடைக்கும் ஆதாரத்தின்படி வழக்கு தொடரப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட பால் விநியோக கூட்டுறவுச் சங்கங்களில் வழக்குகள் பதிவு செய்வதும், குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவதுமாக இருக்கிறது. அப்படி இருந்தாலும் ஏற்கெனவே 'ப்ரைமாஃபெசி' இருந்தால் கையாடல் செய்தவர்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூல் செய்து சங்கத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, அதைப் போல கூட்டுறவுச் சங்கங்களிலே கையாடல் செய்யும் தலைவர்கள் மீண்டும் பொறுப்பில் இருக்கக்கூடாது என்று அரசு நிபந்தனை விதிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, புதிய கூட்டுறவுச் சட்டத்திற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது. சட்டம் வரும்போது இதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தமாதிரியாக கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நடைபெறுவதும், அதைக் கண்டுபிடித்து வழக்குத் தொடருவதில் தாமதம் ஏற்படுவதற்கும் காரணம் இரண்டு ஆண்டுகள் கழிந்துதான் தணிக்கை நடைபெறுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருக்க அந்த, அந்த ஆண்டிலேயே தணிக்கை செய்வதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கருத்தில் கொள்ளப்படும்.

சேயூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 813:—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசி யூனியன் சேயூரில் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 814:—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தாலுக்காவிலுள்ள கும்பக்கரையை சுற்றுலாத் தலமாக்கவும், பயணிகள் தங்குவதற்குக் குறைந்த வாடகையில் ஓய்வில்லங்கள் கட்டவும் செயற்குறிப்பு உள்ளதா?